# இன்று உயிர்ப்பின் காலம் ஆறாம் ஞாயிறு.

*திருவழிப்பாட்டு ஆண்டு B (10-05-2015)*

*திருப்பலி முன்னுரை ~ 1*

இறைவனின் அன்பர்களே,

இறைமகன் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். நாம் இறைவனின் அன்பில் நிலைத்திருக்க இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது. இயேசு தந்தையின் அன்பில் நிலைத்திருப்பதுபோல, இயேசுவின் கட்டளைகளை கடைபிடித்து அவருடைய அன்பில் நிலைத்திருக்க நாம் அழைக்கப்படுகிறோம். இயேசுவில் இணைந்திருந்து, ஒருவர் மற்றவரை அன்புசெய்து வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

**திருப்பலி முன்னுரை ~ 2**

அன்புக்குரியவர்களே,

உயிர்ப்பின் காலம் ஆறாம் வாரத்தில் அன்புப் பலியில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். இன்று பாஸ்காக் காலம் ஆறாம் ஞாயிறு.

கடவுளுக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர் என்னும் செய்தியோடு இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்குள் நுழைய இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. அன்பு என்பது இறை □ மனித உறவின் வல்லமை, அது மகிழ்சி அளிக்கும் ஆற்றல் என்பது இன்று நமக்கு வெளிப்படுத்தப்படும் மாபெரும் உண்மையாகும். என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப் பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்: என்னும் இறைவனின் குரல், தூய அன்பு கொண்டு வாழ்வதால் நாம் மகிழ்ச்சி, நிறைவு, உடல் நலம், நல்லுறவு என்பவற்றைப் பெற்றுக் கொள்ளுகின்றோம் என்னும் நற்செய்தியை நமக்குத் தருகின்றது. இறைவனின் இந்த மாபெரும் அருள் ஆசீர்வாதத்திற்காக முழு உள்ளத்தோடு நன்றி கூறிக்கொண்டு, கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து, இறையன்பில் நிலைத்திருந்து, நேர்மையாகச் செயற்பட்டு இறையரசின் மக்களாக வாழ நம்மை அர்ப்பணித்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**திருச்சபைக்காக:**

ஆற்றலின் ஊற்றே என் இறைவா! இன்றைய சூழலில் சமய வேறுபாடுகள் வேரூன்றி இறைமக்களை சிதறடிக்கும் வேளையில் திரு அவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்கள், பொதுநிலையினர் என இவர்கள் அனைவரின் மீதும் உம் துணையாளாரின் ஆற்றலை பொழிந்து உம் பாறையாகிய திருச்சபையைக் காத்திட, அருள் வாழ்வில் சிறந்து பணியாற்றிட, வேண்டிய வரம் தர வேண்டி இறைவா உமை மன்றாடுகின்றோம்.

**இரக்கத்தின் ஊற்றே இறைவா,**

உலகத்தின் கவலைகளுக்கும், துன்பங்களுக்கும் தீர்வு தேடி அலையும் மக்கள் அனைவரும், உம் வழியாக அமைதி காணவும், நீரே உண்மையான கடவுள் என்பதை உணரவும், உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்கருணையில் உம் திருமகனின் உடனிருப்பை உணரவும், பிற சமயத்தினர் முன்னிலையில் உமக்கு சான்று பகரவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**பேரன்பையும் உறுதிமொழியையும் என்றும் நினைவுகூரும் தந்தையே இறைவா!**

உம்முடைய மக்களாகிய நாங்களும்: உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து, இறையன்பில் நிலைத்திருந்து, நேர்மையாகச் செயற்பட்டு இறையரசின் மக்களாக வாழ வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**சிறார்களுக்காக:**

“என் அன்பில் என்றென்றும் நிலைத்திருங்கள்’ என்ற எம் இயேசுவே! உமது அன்பில் சிறார் அனைவரும் இன்றைய சூழலுக்கேற்ப தங்களை அன்பின் பாதையில் பயணிக்கவும், இறை – மனித – உறவில் அவர்கள் சங்கமித்து ஆசிரியர்கள் ~ ஆன்றோர்களின் சொல்லுக்கு கீழப்படிந்து இறைவார்த்தையின் ஒளியில் வாழ்ந்து வளர்ந்திடவும், வேலையின்றியும், வதிவிட அனுமதிக்காக வேதனையோடு காத்துக்கொண்டும், குடும்பப் பிரச்சனைகளால் அமைதியிழந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் அனைவர் மேலும் மனமிரங்கி அவர்களின் வேதனைகள் அனைத்தையும் மகிழ்ச்சியாக மாற்றிட வேண்டுமென்றும், இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவா!**

ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் வறுமையில் வாடுவோர் அனைவரும் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்றும், உடலின் உயிர்ப்பினால் மாட்சிபெற்ற உம் திருமகனைப் போன்று, உள்ளத்தின் உயிர்ப்பினால் உமது மாட்சியில் பங்குபெறும் தகுதி அடையுமாறு எம் நாட்டினர் அனைவருடைய வாழ்வையும் புதுப்பிக்க வேண்டுமென்றும், உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.